Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/42**

Paper 4 Texts **May/June 2024**

**2 hours 30 minutes**

*7535075967*

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

**INSTRUCTIONS**

- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  - Answer **at least one question** from Section 1.
  - Answer **at least one question** from Section 2.
  - Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

**INFORMATION**

- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

## கட்டளைகள்

- மொத்தம் மூன்று கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து, எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  - முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

## தகவல்

- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **12** pages. Any blank pages are indicated.


© UCLES 2024

https://xtremepape.rs/

**விடைத்தாள் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டளைகள்**

கருப்பு அல்லது கரு நீலப் பேனாவைப் பயன்படுத்தவும்.

வரைபடங்களுக்கோ, கிராப் வரையவோ நீங்கள் எச்.பி.பென்சிலைப் பயன்படுத்தலாம்.


உங்களுடைய பெயர், சென்டர் எண், உங்கள் எண் ஆகியவற்றை, இந்தப்பக்கத்தின் மேலேயுள்ள, அதற்கான இடத்தில் எழுதவும். தெளிவாக, பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

எழுத்துக்களை அழிப்பதற்கான பேனாவையோ, திரவத்தையோ **பயன்படுத்தக்கூடாது**.

எந்த பார்க்கோடிலும் **எழுதக்கூடாது**.

கொடுக்கப்பட்ட விடைத்தாள் புத்தகத்தில் எழுதவும். தாளின் இரு பக்கங்களிலும் எழுத வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை எழுதிய பின்னர் இரண்டு வரி இடைவெளி விடவும்.

நீங்கள் விடை எழுதும் கேள்வியின் எண்ணை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீங்கள் விடை எழுதும் கேள்வியில் துணைக் கேள்விகள் இருந்தால் (எடுத்துக்காட்டு 1.a) துணைக் கேள்வி எண்ணை இரண்டாவது மார்ஜினில் எழுதுங்கள்.

நீங்கள் விடைத்தாள் புத்தகத்தில், விடை எழுதுவதற்கான குறிப்புகளையும் பேனாவால் எழுதிப் பழகலாம் ஆனால் மதிப்பெண். **போடவேண்டாத** அத்தகைய குறிப்புகளை அடித்து விடுங்கள். படிக்கமுடியாமல் அடிக்கத் தேவை இல்லை.

விடைத்தாள் புத்தகத்தின் எந்தப் பகுதியயையும் **கிழித்துவிடாதீர்கள்**.

நீங்கள் எழுதிய எல்லா தாள்களையும் கொடுத்து விடுங்கள் தொடர்ச்சிக்காக விடைத்தாள். புத்தகங்கள் வாங்கியிருந்தால் அவற்றையும் விடைத் தாள் புத்தகத்தில் இணைத்து விடுங்கள்.



https://xtremepape.rs/

BLANK PAGE



https://xtremepape.rs/

**ஏதாவது மூன்று கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகளை எடுத்து விடைகள் எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.**

**பகுதி 1**

**1 பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.**

**(a) அகநானூறு**

இடை பிறர் அறிதல் அஞ்சி, மறை கரந்து,
பேஎய் கண்ட கனவின், பல் மாண்
நுண்ணிதின் இயைந்த காமம் வென் வேல்,
மறம் மிகு தானை, பசும்பூண், பொறையன்
கார் புகன்று எடுத்த சூர் புகல் நனந்தலை

மா இருங் கொல்லி உச்சித் தாஅய்,
ததைந்து செல் அருவியின் அலர் எழப் பிரிந்தோர்
புலம் கந்தாக இரவலர் செலினே,
வரை புரை களிற்றொடு நன் கலன் ஈயும்
உரை சால் வண் புகழ்ப் பாரி பறம்பின்

நிரை பறைக் குரீஇயினம் காலைப் போகி,
முடங்கு புறச் செந்நெல் தரீஇயர், ஓராங்கு
இரை தேர் கொட்பின் ஆகி, பொழுது படப்
படர் கொள் மாலைப் படர்தந்தாங்கு,
வருவர் என்று உணர்ந்த, மடம் கெழு, நெஞ்சம்!



https://xtremepape.rs/

ஐயம் தெளியரோ, நீயே; பல உடன்
வறல் மரம் பொருந்திய சிள்வீடு, உமணர்
கண நிரை மணியின், ஆர்க்கும் சுரன் இறந்து,
அழி நீர் மீன் பெயர்ந்தாங்கு, அவர்
வழி நடைச் சேறல் வலித்திசின், யானே.

- ஔவையார், பாடல் 303

**(i)** குரீஇயினம், சிள்வீடு ஆகிய சொற்களின் பொருள் என்ன?

**(ii)** மேலே உள்ள பாடலில் கனவில் பேயைக் கண்டது போல் தலைவனை பிரிந்திருக்கும் தலைவி தன் பிரிவுத் துயரத்தை வெளிகாட்டாமல் தன் நெஞ்சிற்குச் சொன்னது என்ன? [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம்**

“மையல் மனம்விட் டகல்வா ரல்லர்” என்று நம்பிக்கையுடன் தொடங்கிய கானல்வரி பாடல் “காதலனுட னன்றியே மாதவிதன் மனைபுக்காள்” என்று மிகுந்த சோகத்துடன் முடிந்ததை விளக்குக. [25]



https://xtremepape.rs/

**2 திருக்குறள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.**

**(a)** வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**(i)** மேலே சொல்லப்பட்டிருக்கும் மூன்று குறள்களில் வரும் வசை, இசை என்ற சொற்களின் பொருள் என்ன?

**(ii)** "புகழ்" இல்லாமல் வாழ்வது வாழ்க்கையல்ல என்ற வள்ளுவரது உறுதியான கருத்தை மேலே குறிக்கப்பட்டுள்ள குறள்களிலும், புகழ் அதிகாரத்தில் உள்ள மற்ற குறள்களிலும் எவ்வாறு வலியுறுத்துகிறார் என்று விளக்குக. [25]

**அல்லது**

**(b)** "உழவு" என்னும் அதிகாரத்தில் உழவின் சிறப்புகளை வள்ளுவர் எவ்வாறெல்லாம் போற்றுகிறார் என்று விளக்கவும். [25]



https://xtremepape.rs/

3 தேவாரம் - திருஞான சம்பந்தர்

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.**

**(a)** உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றாதென்னாப்
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

**(i)** எந்த சூழ்நிலையில் திருஞான சம்பந்தரால் இந்த தேவாரப் பதிகம் பாடப்பட்டது? “புத்தரும் சமணரும் புறன்உரைக்க” என்பதன் பொருள் என்ன?

**(ii)** தேவைப்படுகின்ற பொருளை நீ எனக்குத் தரவில்லையானால் அது உன் திருவருளுக்கு அழகாகுமா என்று இறைவனையே கேள்வி கேட்ட பதிகத்தின் நயத்தினை விளக்குக? [25]

**அல்லது**

**(b)** திருவாவடுதுறைப் பதிகம் மக்களின் வறுமையைப் போக்கி வளமான வாழ்வு வழங்குவதாகக் கருதப்படுகிறது என்பதனை பாடலில் இருந்து மேற்கோள் காட்டி விளக்கவும். [25]



https://xtremepape.rs/

## பகுதி 2

**4 இக்காலக் கவிதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.**

**பாரதியார்**

**(a)** “எக்கால மும்பெரு மகிழ்ச்சி-யங்கே எவ்வகைக் கவலையும் போரு மில்லை” என்று “கற்பனையூர்” என்ற பாடலில் அவ்வூரைப் பற்றி பாரதியார் கூறும் சிறப்புகள் என்ன? [25]

**அல்லது**

**பாரதிதாசன்**

**(b)** “புது நாளினை எண்ணி உழைப்போம்” என்ற பாடலில் உழவுத்தொழிலின் உயர்வுகளைப் பற்றி பாரதிதாசன் கூறும் விளக்கங்கள் என்னென்ன? [25]

**5 அந்த நாள் - நாவல்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.**

**(a)** வரலாற்றுப் பதிவுகளிலிருந்து மறைந்து விட்ட, பர்மாவிலிருந்து ஓடி வந்த தமிழர்கள் பட்ட அளவில்லாத் துன்பங்களைப் பற்றி அந்த நாள் நாவல் எவ்வாறு விளக்குகிறது? [25]

**அல்லது**

**(b)** நாடுகளுக்கிடையே நடக்கும் போரில் அதில் ஈடுபடும் வீரர்கள் மட்டுமல்லாது அனைத்து மக்களும் கொடுமைக்கு ஆளாகும் அவலம் பற்றி இந்த நாவல் எப்படி விளக்குகிறது? [25]



https://xtremepape.rs/

**6 தமிழ் சிறுகதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.**

**(a)** தன்னை குரு என்று எண்ணிக் கொண்டிருந்த கதாநாயகன் தான்தான் சீடன் என்று உணர வைத்த ஞானோபதேசக் கதை "குருபீடம்" பற்றி ஒரு கட்டுரை வரைக. [25]

**அல்லது**

**(b)** "காட்டில் ஒரு மான்" சிறுகதையில் அந்த காலத்தில் பெண்களின் நிலைப்பாடு பற்றி நீ என்ன உணருகிறாய்? [25]

© UCLES 2024


https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2024 

https://xtremepape.rs/

BLANK PAGE



https://xtremepape.rs/

BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/